TEMASEK

# மீண்டெழுங்கள் முன்னோக்குடன்

ஓர் ஆண்டுக்குப் பிறகும்,
கொவிட்-19 கிருமிப்பரவல் அலைகள்
உண்டாக்கிய தவிப்பும் சீர்குலைவும்
நம் நினைவுகளில் இன்னும்
பசுமையாகப் பதிந்துள்ளன.

உலகம் ஒன்றிணைந்து, தட்டுத்தடுமாறி,
இந்தப் பாதிப்பை எதிர்கொள்வதற்கான
அறிவியலையும் தீர்வுகளையும் துரிதப்படுத்தியது.

ஆய்வுகளும் தடுப்பூசிகளும் வழங்கக்கூடிய
நம்பிக்கை ஒளியை நாம் இப்போது காண்கிறோம்.

கொவிட் கிருமிப்பரவலுக்கு முந்திய உலகுக்குத் திரும்பிச்
செல்வது சாத்தியமல்ல;
இதைவிடப் பெரிய சீர்குலைவுகளைத் தடுப்பதற்குள்ள
நேரமும் குறைந்து வருகிறது.

எனவே, பருவநிலை மாற்றம், உணவுப் பாதுகாப்பு,
தண்ணீர் தட்டுப்பாடு ஆகிய
உலகளாவிய மிரட்டல்களுக்குத் தீர்வுகாண நாம்
இப்போதே செயல்பட்டாக வேண்டும்.


**ஒன்றிணைந்து**
நாம் **முன்னோக்குடன்** மீண்டெழுகையில்
நமது அடிப்படைகளின் நீடித்த நிலைத்தன்மையில்
கடப்பாடு கொண்டிருப்போம்;
மீள்திறனையும் நோக்கத்தையும் எப்போதும்
கட்டிக்காப்போம்



## முன்னோக்குள்ள ஒரு முதலீட்டாளர்

மாறிவரும் உலகுக்கு ஏற்ப எங்கள் முதலீட்டுப் பட்டியலை நாங்கள் மாற்றியமைக்கையில், புத்தாக்கத்தையும் வளர்ச்சியையும் தூண்டும் முதலீடுகளைச் செய்தோம்

### தொடங்கப்பட்டதிலிருந்து நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு




தெமாசெக்கின் முதலீட்டுப் பட்டியல் பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்


● சந்தை மதிப்பு ● பங்குதாரர் பங்குமுதல்
-- குறியிலிருந்து சந்தை வரையிலான அசைவு தவிர்த்த பங்குதாரர் பங்குமுதல்[5]

### தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு

தெமாசெக் கடன் நிலைக் குறிப்பு, எங்கள் கடன் தரத்தையும் நிதிநிலை பலத்தையும் எடுத்துக்காட்டுகிறது. எங்கள் முதலீட்டுப் பட்டியலின் மதிப்பில் கடன் விழுக்காடு எவ்வளவு குறைவாக இருக்கிறதோ, அந்த அளவுக்கு எங்கள் கடன் தரம் அதிகமாக இருக்கும்

**ஆதாய ஆற்றல்[6]**

மொத்த கடன்
**5%**
நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பில்




● மொத்த கடன்
● நிகர முதலீட்டுப் பட்டியல் மதிப்பு

தெமாசெக்கின் கடன் நிலைக் குறிப்பு பற்றி மேல்விவரம் அறிய வருடுங்கள்

**24.53%[7]**
**பங்குதாரருக்குரிய ஓர் ஆண்டின் ஆதாயம்**
கடந்த பத்தாண்டுகளில் ஓர் ஆண்டின் ஆதாயம் -9%[6] முதல் 25%[6]

**8%[7]**
**பங்குதாரருக்குரிய 20 ஆண்டின் ஆதாயம்**
தொடங்கப்பட்டதிலிருந்து மொத்த பங்குதாரர் ஆதாயம் 14%[7]

**60%[6,8] -க்கு மேலான முதலீட்டுப் பட்டியல்**
**ஆசியாவில் நிலைநிறுத்தப்பட்டவை**
சிங்கப்பூரிலுள்ள எங்கள் முதலீட்டுப் பட்டியலில் 24%[6,8]

**எங்களது நீண்டகால முதலீட்டுப் பட்டியலின் உருவாக்கத்தை நிர்ணயித்து, எங்களின் முதலீட்டு நடவடிக்கைகளுக்கு வழிகாட்டும் நான்கு முக்கிய அமைப்புமுறை நடைமுறைகள்**

#### மின்னிலக்கமயம்
**பல்வேறு துறைகளை உள்ளடக்கிய மின்னிலக்கத் தொழில்நுட்பங்கள்**

**ஹோபின்**
மெய்நிகர் நேரலை நிகழ்ச்சி நிர்வாகத் தளம்

**நியூம்**
உலகெங்கிலும் தடம் பதித்திருக்கும் நிதிச் சேவைகள் தளம்

#### நீடித்து நிலைக்கத்தக்க வாழ்க்கை
**நீடித்த நிலைத்தன்மைக்கான தயாரிப்புகளும் சேவைகளும்**

**ரிவுலிஸ்**
விவசாயிகளுக்கான தண்ணீரைச் சேமிக்கும் தொழில்நுட்பம்

**ஈவோர் டெக்னாலஜீஸ்**
நிறை சுற்றமைப்பு புவியியல் வெப்பச்சக்தி மீட்பு முறை

#### பயனீட்டின் எதிர்காலம்
**பயனீட்டு வகைகளிலும் முறைகளிலும் புதிய மாற்றங்கள்**

**கோ டூ குரூப்**
தேவைப்படியான மின்-வர்த்தக, நிதிச் சேவைகள் தளம்

**சீ லிமிடெட்**
மின்னிலக்கப் பொழுதுபோக்கு, மின்-வர்த்தகம், நிதிச் சேவைகள் தளம்

#### நீண்ட ஆயுட்காலம்
**நீண்ட ஆயுட்காலத்தினால் அதிகரித்துவரும் தேவைகள்**

**பயோஎன்டெக்**
புற்றுநோய்க்கான அடுத்த தலைமுறை சிகிச்சை முறைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது

**அர்ரேல் குரூப்**
பல் மருந்தகம் மற்றும் மருத்துவமனை குழுமம்

3 25 ஜூன் 1974 அன்று தெமாசெக் நிர்மாணிப்பு.
4 நிதியாண்டின் முடிவு 1993-க்கு முன்பாக இருந்த டிசம்பர் 31ம் தேதியிலிருந்து 1994 முதல் மார்ச் 31ம் தேதியாக மாற்றப்பட்டது.
5 31 மார்ச் 2006 முடிவுற்ற நிதியாண்டிலிருந்து, கணக்கியல் தரங்களின்படி 20% துணை முதலீடுகள் சந்தைக்குரியதாகக் குறிக்கப்படவேண்டும்.
6 31 மார்ச் நிலவரப்படி.
7 31 மார்ச் 2021 நிலவரப்படி.
8 அடிப்படை சொத்துகளின் அடிப்படையிலான பங்கீடு.

## முன்னோக்குள்ள ஒரு நிறுவனம்


எங்கள் முதலீட்டுப் பட்டியல் சார்ந்த நிகர கரிம வெளியாக்கத்தை 2030ஆம்[1] ஆண்டுக்குள் 2010ஆம் ஆண்டின் பாதி அளவுக்குக் குறைப்பதில் உறுதி கொண்டு இருக்கிறோம், மேலும் 2050ஆம்[2] ஆண்டுக்குள் பூஜியத்திற்குக் குறைக்கும் இலட்சியத்தை அடையாளம் காட்டியிருக்கிறோம்

**கரிம வெளியாக்கம் இல்லாத உலகை அடைவதற்கான மும்முனை அணுகுமுறை**

**மேம்பட்ட கரிமத் தீவிரத்தன்மையும் செயலாற்றலும் கொண்ட தொழில்நிறுவனங்கள் போன்றவற்றிலுள்ள பருவநிலை சார்ந்த வாய்ப்புகளில் முதலீடு செய்தல்**

**கரிம வெளியாக்கத்தைத் தடுக்கும் தீர்வுகளுக்குத் துணை புரிதலும், உயர்தரமான கரிம கணக்கீடுகளை உருவாக்குதலும்**

**பேச்சுவார்த்தை, அறிவாற்றல், கருவிகள் ஆகியவற்றின்மூலம் தொழில் நிறுவனங்களின் கரிமத் தடுப்பு முனைப்புகளுக்கு ஊக்கமளித்தல்**



1 பருவநிலை மாற்றத்திற்கான அனைத்து அரசாங்கக் குழு (IPCC) அண்மையில் வெளியிட்ட அறிவியல் மதிப்பீடுகளின் (AR5) அடிப்படையில் இலக்கு வகுக்கப்பட்டது.
2 நாள்காட்டி ஆண்டுக்கும் எங்களது நிதி ஆண்டுக்கும் இடையில் வேறுபாடுகள் இருப்பதால், நாள்காட்டி ஆண்டின் கரிம வெளியாக்கப் புள்ளிவிவரங்களும் இலக்குகளும் அதற்கடுத்த நிதி ஆண்டில் தெரிவிக்கப்படுகின்றன.

## முன்னோக்குள்ள ஒரு பொறுப்பாளர்

தொடர்ந்து நீடித்துவரும் கிருமிப்பரவலால் பாதிப்படைந்த சமூகங்களுக்கு தெமாசெக் தொடர்ந்து முனைப்புடன் ஆதரவளித்து வருகிறது



**பரிசோதனையும் நோயைக் கண்டறிதலும்**
கூட்டாளர்களுடன் சேர்ந்து கொவிட்-19 ART* பரிசோதனைகளை முன்னோட்டமாகத் தொடங்கியது



**பாதுகாப்பும் தடுப்பும்**
சிங்கப்பூரின் தடுப்பூசித் திட்டம் பற்றி பொதுமக்களின் விழிப்புணர்வை வளர்த்தது



**பரவல் கட்டுப்பாடும் தொடர்புகளின் தடமறிதலும்**
சமூகப் பராமரிப்பு வசதிகளை அமைப்பதற்கும் தொடர்புகளின் தடமறிவதற்கான மின்னிலக்கத் தீர்வுகளை உருவாக்குவதற்கும் துணை புரிந்தது



**பராமரிப்பும் சிகிச்சையும்**
தடுப்பூசி மருந்துகள், நோய்நீக்கல் சிகிச்சை முறைகள் ஆகியவற்றின் உருவாக்கத்திற்குத் தூண்டுகோலாக இருந்தது



**உதவி**
சிங்கப்பூரிலும் வெளிநாடுகளிலும் உள்ள எளிதில் பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவி வழங்கியது

* ஏண்டிஜன் விரைவுப் பரிசோதனை *(Antigen Rapid Test)*